# விளம்பரம்™

**VLAMBARAM™**

☎: 416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE

நதி 09 - பாலம் 22 NOVEMBER 15, 1999



## வீடு விற்பது, வாங்குவது

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎: 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன் sales rep.

RE/MAX Crossroads Rlty Inc.

* இன்றைய சேவை- நாளைய வெற்றி



- விமானப் பயணத்தில் பரிதாப உயிரிழப்பு (பக். 2)
- 1000 தமிழ் இளைஞர்கள் கலந்து கொள்ளும் உதைபந்தாட்டம் (பக். 6)
- MGR விரும்பிப்பார்க்கிம் சிவாஜியின் படம்? (பக். 7)
- காதில் தோடு, கழுத்தில் சங்கிலி, அதில் மோதிரம்? (பக்.10)
- வீடு விற்க / வாங்க தகுந்த நேரம் (பக். 13)
- 'முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்' (பக்.5)
- சூரியன் எந்த வடிவில் சுற்றுகிறது (பக் 9)
- தூரப்பயணம் செய்யும்போது கவனிக்கவேண்டியவை (பக்.12)




விடியலுக்காய் உயிர் நீத்த அனைவரையும் என்றுமே நினைவில் கொள்வோமாக!


இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்

## சபோனாவிற்கு!

*Sabona & Gift*

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151

*Markham / Eglinton*

(கலைமகள் புத்தக நிலையத்திற்கு உள்ளே)


## அருள் விருந்து

*-செ. சிவசுப்பிரமணியம்*

- கட்டிடத்தில் உள்ள செங்கற்களை இணைத்து வைப்பது சுண்ணாம்புச் சாநது. சமுதாயத்தில் உள்ளவர்களை இணைத்து வைப்பது சுயநலப்பற்றின்மை என்னும் பெருநிலை.
- உலகத்தினின்று நீ ஏற்பது குறைவாகவும் உலகத்துக்கு நீ வழங்குவது அதிகமாகவும் இருக்கட்டும்.
- பக்தி தாய் போன்றது; ஞானம் தந்தை போன்றது. சுத்த பக்தியும் சுத்தஞானமும் ஒன்றே.
- கேடுகள் அனைத்துக்கும் பிறப்பிடம் பலவீனம். வலிவற்றவன் தீமைக்கு ஆளாகிறான். வலிவுடையவனைத் தீமை எதுவும் தாக்காது.
- இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமானவனே மேலோன்.

## அன்றும் இன்றும்

ஒரிசா புயலில் டி.வி. கோபுரம், மின்சார கம்பங்கள், மரங்கள் போன்றவை சர்வ சாதாரணமாக சரிந்து வீழ்ந்தன. சமீப காலத்தில் கட்டிய புதிய கட்டிடங்கள் கூட இடிந்து நொறுங்கின. ஆனால் ஒரிசாவில் 6ம் நூற்றாண்டு முதல் 12ம் நூற்றாட்டு வரை கட்டப்பட்டுள்ள பழங்கால கோவில்களில் ஒன்று கூட சேதம் அடையவில்லை. இது காண்போரை வியப்பில் ஆழ்த்துகிறது. சில இடங்களில் கோவில்களின் உச்சியில் பறக்கும் கொடிகள் கூட அப்படியே உள்ளன. மணிக்கு 250 கி..மீ. வேகத்தில் வீசிய புயலுக்கு இந்த கோவில் கொடிகள் ஈடுகொடுத்தது அதிசயமாக உள்ளது.

இதுகுறித்து ஒரிசா தொல்பொருள் ஆராய்ச்சித் துறை மேற்பார்வையாளர் பி.கே. ராத் கூறுகையில் புவனேசுவரம் நகரில் 320 கோவில்கள் உள்ளன. இவை 6ம் நூற்றாண்டில் இருந்து 18ம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் கட்டப்பட்டவையாகும். இக் கோவில்களில் ஒன்றும் இடியவும் இல்லை, சேதம் அடையவுமில்லை. பழங்கால பாரம்பரிய முறைப்படியும் கோவில்களுக்கு உரிய கட்டிட கலையை பின்பற்றியும் வாஸ்து தத்துவப்படியும் இவை கட்டப்பட்டுள்ளன என்றார்.


(தொடர்ச்சி 12ம் பக்கம்)


## உன்னை அறிந்தால்

***'இன்றுபோல் என்றும் வாழ்க'***.... இந்தக் கூற்று ஒரு சரியான கூற்றா? தவாறான கூற்றா? ஏனெனில் ஒருவரை வாழ்த்தும் நேரத்தில் கஸ்டத்துடன், நஷ்டத்துடன், நோய்பிணியுடன் வாழ்வானாகில் அவரை இன்றுபோல் என்றும் வாழ்க என வாழ்த்துவது சரியா? எனவே வாழ்த்தும் போது சகல நன்மைகளையும், சௌகரியங்களையும், சௌபாக்கியங்களையும், நீண்ட ஆயுளையும், நோயற்ற வாழ்வையும், குறைவற்ற செல்வத்தைவும், தாழாத கீர்த்தியையும், மாறாத வார்த்தையையும், நஷ்டங்கள் வாராத கொடையும் இப்படியாக பலவற்றைச் சொல்லி வாழ்த்தலாம்.

வாழ்த்துவதற்கு வயதில்லை. வயதில் சிறியவர் மூத்தோரையும் வாழ்த்தலாம். வாழ்த்துவதற்கும் வயதிற்கும் தொடர்பு கிடையாது. வாழ்த்துவதற்கு மனம் பெரிதாக இருந்தால் போதும்.

**சிந்திக்கவும்... செயல்படவும்**

***-நெற்றிக்கண்ணன்***


விளம்பர வினாடி வினா! CTBC RADIO ✡ SUNDAYS ✡ 7:30 PM

SINGAPORE PAGING

$25.00 +Taxes 200min/Month

$100. FREE PAGER Incl. 1YEAR SERVICE

Nokia 6188 with VIB

CANTEL

Bell Mobility

$50.00 +Taxes / Month
7 a.m. - 7 p.m. 200min இலவசம்
7 p.m. - 7 a.m. கிழமை நாள் இலவசம்
Fri. 7 p.m. - Mon. 7 a.m. இலவசம்
மேலதிக நிமிடம் 12.5 சதம் மட்டுமே

Mobile Massage, Call Forwarding, Call Display per second billing included.

மேலதிக விபரத்திற்கு சக்தி: (416) 745-2378

HOTLINE: (416) 980-1234

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221



சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)

திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978

# அறிவும் ஆக்கமும் (45)




-விஜே குலத்துங்கம்

நொவம்பர் மாத முற்பகுதியில் Etypt Air 990 என்னும் Boeing 767 ரகத்தைச் சேர்ந்த விமானம் 217 பேருடன் கடலில் மூழ்கியது. இந்த விபத்துக்கு காரணம் Thrust Reverser என்னும் பாகம் விமானம் பறந்து கொண்டிருக்கும்போது இயங்கியதால் ஏற்பட்டது எனக் கூறப்படுகின்றது. இதை விரிவாக விளங்குவதற்கு முதலில் விமானம் எப்படி பறக்கின்றது என்பதைப் பார்ப்போம். சிறுவயதில் காற்றாடி அல்லது பட்டத்தை ஏற்றியவர்களுக்கு இதை விளங்குவது சுலபம். பட்டத்தை ஏற்றும்பொழுது, கயிற்றினால் பட்டத்தை முன்னோக்கி இழுப்போம். பட்டம் முன்னோக்கி சரிந்த நிலையில் இருக்கும் இழுக்கும் போது காற்று சரிவான பகுதியை தாக்கும் போது, காற்று கீழ்நோக்கி தள்ளப்படும். நீயூட்டனின் (Newton) மூன்றாம் விதிப்படி, எந்த ஒரு தாக்கத்திற்கும் எதிர்த்தாக்கம், இருக்கும். எனவே காற்று கீழ்நோக்கி தள்ளும்போது, எதிர்த் தாக்கம் பட்டத்தை மேலே தள்ளும். காற்றுப் பலமாக வீச பட்டம் மேலே எழுப்புகின்றது. ஓரளவு மேலே சென்றவுடன் காற்றின் வேகம் சீராக இருப்பதால், தாக்கமும் எதிர்த்தாக்கமும் சமமாக இருக்கும்போது, பட்டம் நிலையாக நிற்கும்.

இதே மாதிரியான தொழிற்பாடே விமானம் பறக்கும் போதும் ஏற்படுகின்றது. விமானத்தில் காற்றாடி அல்லது Jet Engine மூலம் காற்று பின்னோக்கி தள்ளப்படும்போது, விமானம் முன்னோக்கி தள்ளப்படும். விமானத்தின் இறக்கைகள் அல்லது Wing சரிவாக அமைந்து உள்ளதால் காற்றை கீழ் நோக்கி தள்ளும் போது ஏற்படும் எதிர்த்தாக்கம் விமானத்தை மேல் நோக்கி தள்ளும் விமானத்தின் நிறையை விட இந்த எதிர்த்தாக்கம் அதாவது Lift கூடவாக உள்ளபோது, விமானம் மேலே கிளம்பும். விமானம் முன்னோக்கி தள்ளப்படும், காற்றாடியின் அல்லது Jet Engine னின் விசை Thrust எனப்படும்

முன்னோக்கி அசையும்போது, விமானத்தின் வடிவம் காற்றை எதிர்ப்பதால் உராய்வுத் தடை ஏற்படும். இந்த உராய்வு விசை Drag எனப்படும். இந்த உராய்வு விசையை குறைப்பதற்காக விமானத்தின் வடிவம் காற்றை கிழித்துக் கொண்டு செல்வதற்காக உருளை வடிவமாக இருக்கும். விமானம் மேலே கிளம்புவதற்காக மற்றும் இறங்குவதற்காக, இறக்கைகளின் வடிவம் சில பாக[illegible] அசைவதின் மூலம் மாற்றியமைக்கப்படும்.

விமானததின் பின்புறமுள்ள வால்பகுதியில் Tail Assemblyல் உள்ள பகுதிகளும் பறத்தலில் உதவி செய்கின்றது. இவையாவன சிறிய இறக்கைகள் போன்ற Stabilizers, மற்றும் Rudder, Elevator என்ற பகுதிகளும் உண்டு. விமானம் பக்கத்திற்கு திரும்ப வேண்டுமானால் திரும்ப வேண்டிய பக்கத்து இறக்கையிலுள்ள சில பாகங்கள் மேலே திருப்பப் படுவதன் மூலம் உராய்வு அதிகரிக்கப்பட அந்தப் பக்க left அல்லது மேலே தள்ளும் விசை குறையும். ஆனால் மறுபக்கம் கூடுதலாக இருக்க விமானம் சரிந்து அந்த பக்கம் திரும்பும். இதற்கு வாலிலுள்ள Rudderக்கு, கப்பலிலுள்ள சுக்கான் போன்று திரும்ப உதவிசெய்யும்.



OURCE: Federal Aviation Administration

விமானம் தரையில் இறங்கி ஓடுபாதையில் ஓடும் போது அதன் வேகத்தை குறைக்க Jet Engine ஊடாக வரும் காற்றை மறித்து முன்தள்ள Thrust Reversars என்ற அமைப்பு உண்டு. சாதாரண நிலையில் உள்ளே இருக்கும் அமைப்பு, தரையில் இறங்கி ஓடும்போதுதான் வெளியே வந்து விரியும். அணமையில விபத்துக்குள்ளான Egypt Air 990 விமானத்தின் இயந்திர கோளாறினால், விமானம் ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்த போது திடீரென இந்த Thrust Reversers வெளிப்பட்டதால் விமானத்தின் சமநிலை குளப்பப்பட்டு தலைகுத்தாக கீழே இறங்கி கடலில் மூழ்கியது. இதே ரக விமானம் ஒன்று 1991 ஆம் ஆண்டு தாய்லாந்தில் 223 பிரயாணிகளுடன் இதே விதமான இயந்திரக் கோளாறினால் விழுந்து நொருங்கியது.

முதலாவது ஆகாய விமானத்தை இயக்கிப் பறந்த பெருமை அமெரிக்காவின் Ohioவிலுள்ள Dayton ஐச் சேர்ந்த Write Brothrs எனக் கூறப்படும் Orville Wright, Wilbar Wright என்ற சகோதரர்களைச் சாரும். 1903ம் ஆண்டு டிசம்பர் 17ஆம் திகதி முதலாவது விமானம் Noth Carolina வில் Orville Wright இனால் செலுத்தப்பட்டது.

ஆரம்பத்தில் இரட்டைத் தகடுகளாக இருந்த இறக்கைள் பின்னர் ஒரு தட்டான இறக்கைகள் ஆனது. முதலாவது வர்த்தக விமானம் 1914இல் பாவனைக்கு வந்தது. 1933ஆம் ஆண்டு Boeing நிறுவனத்தின் 247 அறிமுகப்படுத்தப்பட்டது. இதே காலத்தில் Donald Douglas நிறுவனம் DC-1, DC-2, DC-3 ஆகிய விமானங்களை உருவாக்கியது. பிரித்தானியாவின் Dehavillang நிறுவனம் 1952ஆம் ஆண்டு Jet விமானத்தை உருவாக்கியது. ஒக்டோபர் 1958இல் Boeing 707 ம், DC-8ம் உருவானது. 1960ல் Jumbo Jet உருவாகியது. Boeing நிறுவனமே முதல் Jumbo Jet ஆன Boeing 747ஐ உருவாக்கினது. 1980களில் Boeing 757, 767 ஆகியன உருவாகியன..

அண்மையில் பிரபல Golf விளையாட்டு வீரரான Payne Stewart சென்ற Lear Jet என்ற விமானம் விபத்துக்குள்ளாகி அதில் இருந்த 5 பேர் இறந்தார்கள். ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு முன்னர், இலங்கையின் மிகப் பெரிய செல்வந்தராகிய உபாலி விஜேரத்ன என்பவர் தன்னுடைய சொந்தமான இதேரக Lear Jet விமானத்தில் செல்லும் போது விபத்துக்குள்ளாகி அவருடன் சேர்த்து 13பேர் இறந்தார்கள். இந்த விபத்துக்குரிய காரணம் அமுக்க வித்தியாசம் என சந்தேகிக்கப்படுகின்றது. உயரம் கூடிச் செல்லச் செல்ல அமுக்கம் குறையும். Oxygen அளவும் குறையும். 10,000 அடிக்கு மேல் மனிதன் சுவாசிப்பது க[illegible] எனவே உயரச் செல்லும் போது, விமானத்தினுள் அமுக்கத்தைச் சரிசெய்ய வெளியிருந்து காற்றாடி அல்லது jet engine காற்றை பின்தள்ளும் போது, காற்றின் ஒரு பகுதி அமுக்கப்பட்டு (Compress) உள்ளே செலுத்தப்படும். இது சரிவர செய்யப்பட வேண்டும். விமானங்களில் அமுக்க வித்தியாசம் ஏற்பட்டால் Oxygen Mask தானாக இறங்கிவர நாம் அதை எடுத்து அணிய வேண்டும். ஆனால் விரைவாக அணிவதற்கு போதிய நேர அவகாசம் வேண்டும். 20,000 அடி உயரத்தில் 10 நிமிடம் தாக்குப்பிடிக்கலாம், 26,000 அடி உயரத்தில் 2 நிமிடத்திற்கு தாக்குப் பிடிக்கலாம், 30,000 அடி உயரத்தில் 30 செக்கன்களும் 40,000 அடியில் 15 செக்கன்களுமே தாக்குப் பிடிக்கலாம். எனவே மிக உயரத்தில் Mask அணிய நேர அவகாசம் இல்லை. அதுவும் சிறிய விமானம் ஆக இருந்தால் இந்த நேரம் மிகவும் குறைவு. ***பாரதூரமான விபத்துகள் ஏற்பட்டாலும், இன்றைய காலகட்டத்தில் விமானப் பயணம் மிகவும் அவசியமானதொன்றாகும்.*** ************************

*விஜே குலத்துங்கத்தின் "அறிவுக்கு வேலை கொடு" வானொலி நிகழ்ச்சியை CTR வானொலியில் ஒவ்வொரு புதன் இரவு 8 மணி முதல் 9 மணி வரை கேட்டு மகிழலாம்.*

************************************************************


"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.



10 வருடங்களாக தமிழர் மத்தியில்

யோகாஸ்

☎: (416) 267-0408

இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொரு[illegible] உடன் ஆட்டிறைச்சி, கோழி, மாடு, மீன், கணவாய் மற்றும் சகல விதமான உணவுப் பொருட்களுக்கும் நாடுங்கள்


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 101

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | | ■ | 2 |
| | ■ | ■ | 3 | | 4 | | |
| | | 5 | ■ | ■ | ■ | ■ | |
| ■ | ■ | ■ | 6 | ■ | 7 | | |
| 8 | | | | | | ■ | ■ |
| | ■ | ■ | | ■ | 9 | | |
| 10 | | ■ | | ■ | | ■ | |
| | 11 | | 12 | ■ | | | 13 |

**இடமிருந்து - வலம்**

1. இந்தியாவின் 13 ஆவது மக்களையின பிரதமர்
3. முருகன்
5. பாவை (வல - இட)
7. பங்கீடு
8. எண்வகை திருமணங்களில் ஒன்று
9. மரத்தின் புற பகுதி
10. பிள
12. நெற் பயிரின் உலர்ந்த தாள் (வல-இட)
13. வீரம் (வல-இட)

**மேலிருந்து கீழ்**

1. உண்மை
2. பெருந்தன்மை உடையோர்
3. உலர்த்தல் செய் (கீழ்-மேல்)
4. நவக்கிரகங்களில் ஒன்று (கீழ்-மேல்)
6. ஒருமுறை
7. சுழற்றி விளையாடும் சிறுகருவி
8. அண்மையில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் போர் நடந்த இடம்
11. சேவலின் பேடு (கீழ் - மேல்)
13. ஓலையின் அடிப்பகுதி (கீழ்-மேல்)


சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் NOVEMBER 27, 99க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அ | ஞ் | ச | ன | ம் | ■ | தி | வி |
| ஞ் | ■ | ■ | ■ | வு | தீ | ■ | த் |
| சு | ற் | ற | த் | தா | ர் | ■ | தி |
| க | ■ | ■ | ■ | ■ | வு | ■ | யா |
| ம் | ர | சி | ■ | வி | ■ | ரி | ச |
| ■ | ■ | வா | க் | கு | வா | த | ம் |
| ய் | ■ | ■ | ■ | தி | ச | ■ | ■ |
| வே | ளா | ண் | மை | ■ | னை | ன் | அ |

**#100இல் வெற்றி பெற்றோர்**

1)T. Shanmugam, Mississauga, Ont.
2. Mrs. Chandra Nagalingam, Donmills,Ont.


RENOVATION
KATHIR & ASSOCIATES






※ Complete Basement
※ Bath Rooms
※ Kitchen
※ Plumbing
※ Painting

போன்ற உங்களின் சகல விதமான திருத்த வேலைகளிற்கும் அழையுங்கள் : (416)804-5628

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
Motor shampoo
Interior shampoo
Exterior wash & waxing

ONTARIO'S DRIVE CLEAN




**Repairs**
safety certification
overall maintenance
under coating &
Rust proofing

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

முகவரி: **2500 LAWRENCE AVE. EAST, UNIT #11**
**SCARBOROUGH, ONT.** (MIDLAND & LAWRENCE)

☎ (416) **285-4998**



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")

* KITCHEN RENOVATIONS
* BATHROOM REVOVATION
* TILES
* PLUMBING





>Railing >Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5



## EZ DRIVING SCHOOL

நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த மொழியில் பயிற்சி
விளக்கங்களுடன் அரச அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம்
பயிற்சி பெற தொடர்புகொள்ளுங்கள்




*JEYAKUMAR* ✆ (416) 283-4100 Cell: 822-6741

(10 வருடகால அனுபவ பயிற்சியாளர்)


## நினைவில் நிலைத்து நிற்கவேண்டியவை

1. உலகத்திலே பெரிய நாடு அ. சனத்தொகை? ஆ. பரப்பளவு?
   சனத்தொகை - சீனா, பரப்பளவு - ரஸ்யா
2. விஜயகாந்த் இன் 1வது படம் என்ன? 100வது படம் என்ன?
   1வது - இனிக்கும் இளமை, 100வது - கேப்டன் பிரபாகரன்
3. தன் வாழ்நாள் முழுவதும் உட்கார்ந்தபடியே ஆட்சி செய்த மகாராணி யார்?
   ஆஸ்திரியப் பேரரசரின் மகளும், ஹங்கேரி நாட்டின் மகாராணியான மேரியா தெரேசா இவரை மாளிகையின் ஓர் அறையிலிருந்து இன்னோர் அறைக்குக் கூட ஒரு நாற்காலியில் உட்கார வைத்துத்தான் தூக்கிச் செல்வார்களாம்.
4. கோல்ட் மியூசியம் எங்குள்ளது?
   கொலம்பியாவில் உள்ள பகோடா என்னும் இடத்தில்
5. உலகிலேயே மிகச்சிறந்த குத்துச் சண்டை வீரராக (Heavy Weight Champion) முகமட் அலி எத்தனை முறை தேர்ந்தெடுக்கப்பட்டார்? 3 முறை
   1964இல் 1974இல். 1978 இல் வென்றார்


*We are entering 5 th year service in Scarborough.*



**Better Work ... Less Money**

**N.T.E Auto Inc.**
New Trade Engineering

We service
EUROPEAN, JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.

**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**


We will reduce the worry and expense of maintaining your car by offering:

- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

என். ரி. ஈ. ஒட்டோ இங்.

**AUTO INC.**
New Trade Engineering

151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎ (416) 750 - 1573
SIVABALAN






## TAMIL INSURANCE CLAIMS CONSULTANT

தமிழில் இலவச ஆலோசனை

**வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?**

*தகுந்த ஆலோசனை *சட்ட உரிமை *உரிய நஷ்ட ஈடு
*விபத்துக்குள்ளாலியவர் சம்பள இழப்பீடு
*மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும் அறிவுரைகளும் தமிழிலும்
ஆங்கிலத்திலும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள 12 வருடகால அனுபவமுள்ளவர்

**ரவி நடராஜா**

TEl:(416) **245-6555** Fax: (416) **245 7766**

2095 Weston Rd. #201 (South of HWY 401) Toronto Ont. M9N 1X7



# YARLCAN
## STEAM CLEANING





உங்கள் சகலவிதமான
**Cleaning**
தேவைகளுக்கும்
அழையுங்கள்
மோகன்

**Tel: 724-9085**
**Pager : 600 -0335**
**Cell: 721-9709**



# ஆரோக்கிய வாழ்வு (45)

- *N.* செல்வசோதி

## ஆண்மை இன்மை தீர ஆசனப் பயிற்சிகள்

நல்ல பிள்ளைகளைப் பெற்றவருக்கு எழுகின்ற பிறப்பெதிலும் தீமை இல்லை என்கிறார் வள்ளுவர். வாரிசு பெறாமல் மோட்சமில்லை என்கின்றன சாத்திரங்கள். மனித இனம் அழியாது தொடர ஆண்மை நிலைத்து நின்றாக வேண்டும். உடலுற என்பது வாரிசு வேண்டியே வைத்துக் கொள்ள வேண்டுமென்கின்றன சாத்திரங்கள்.

ஆண்மையின்மை

ஆண்மையின்மை என்பது பல வகையில் ஏற்படும். விந்துவில் வீரியமற்ற தன்மை, குறியின் விறைப்புத்தன்மை குறைந்து விடுதல், விந்து தீர்ந்து போதல் அல்லது அதனுள் உயிர்க் கிருமி இல்லாது இருத்தல், கூடும் பெண்ணை திருப்தி செய்ய குறிக்கு சக்தி இல்லாதிருத்தல், ஆணுக்குரிய ஹார்மோன் சரியாகச் சுரக்காமல் பெண்மை மிகுந்திருத்தல், சம்போகம் தொடங்கும் போதே விந்து ஒழுகுதல், சர்க்கரை வியாதி, நரம்புத் தளர்ச்சி போன்றவற்றால் ஆண்மை குறைதல் இவைதான் ஆண்மை குறைவதின் அடிப்படைத் தன்மைகள் இயற்கையான சிகிச்சை முறை

இந்த நோய்க்கு எந்த மருந்தை சாப்பிட்டாலும் பக்க விளைவுகளைத் தடுக்க வழியில்லை இதனை நிரந்தரமாகக் குணப்படுத்துவதற்கு யோக சிகிச்சை ஒன்றுதான் வழி. இதற்குப் பரிகாரமாக சில யோகாசனப் பயிற்சிகளும், நாடிசுத்தி முறைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

ஆனந்தம் அடைவது வேறு, மனைவியை மகிழ்விப்பது வேறு, வாரிசுக்ளை உருவாக்கும் சக்தி வேறு. நாடி சுத்தியால் நல்ல ரத்த ஓட்டத்தை உண்டாக்கலாம். பிராண சக்தியைக் கொண்டு நரம்புகளையும் நாடிகளையும் பலமுள்ளதாக்கி குறைகளைப் போக்கலாம்.

### ஆசனங்களின் பொதுவான பயன்

1. அதிக பருமனையும் ஊளைச்சதையையும் குறைக்கும்.
2. மலச்சிக்கலை போக்கும்
3. சுரப்பிகளைத் தூண்டி சரியாகக் கார்மோன் சுரக்கச் செய்கிறது.
4. உடல் மெலிந்து உறுதியாகி எல்லாவிதமான இயக்கத்திற்கும் ஈடு கொடுக்கச் செய்கிறது.
5. நோய்கள், வாயுத்தொல்லை, ஜீரண குறைபாடு என்பனவற்றிலிருந்து விடுபடுவதால் உடலுறவில் பூரணமாக உற்சாகத்துடன் ஈடுபடமுடிகிறது.

### கடைப்பிடிக்க வேண்டியவை


ஆண்மைக்காக ஆசனப்பயிற்ச செய்ய விரும்புபவர்கள் முதலில் முட்டி மைதுனத்தை நிச்சயம் கைவிட வேண்டும். இவ்வாறு சுய இன்பத்தை நாடுவோர் தனிமை கிடைக்கும் போதேல்லாம் விந்தை வீணக்கி விடுவர். இவர்கள் உடல் சத்தை இழப்பதோடு குறியின் விறைப்பு கெடவும் வாய்ப்பினை உருவாக்குகின்றனர். எனவே அளவோடு சுய இன்பத்தை அனுபவிக்க வேண்டும். ஆசைப்பட்ட போதெல்லாம் நாடக்கூடாது. இத்தகைய எழுச்சிகளை தடுக்கவும் ஆண்மையை உறுதிபெறச் செய்யவும் சில உபாயங்களுண்டு

1. தனிமையை தவிர்க்க வேண்டும்
2. கெட்ட சகவாசம் இருக்கக்கூடாது
3. ஆபாசப் பேச்சைக் கேட்கக் கூடாது, ஆபாச நாவல்கள் படிக்கலாகாது.
3. பெண்கள் பற்றிய பேச்சு அவர்களுடன் நெருங்கிப் பேசுதல், அருகில் அமர்தல் போன்றவற்றை நிறுத்த வேண்டும்.
4. உணவில் காரத் தன்மை அதிகம் இருக்கலாகாது. பழங்கள் காய்கறிகள் அதிகம் உண்ண வேண்டும்.

### பயிற்சிக்கான ஆசனங்கள்


1. பட்சி மொத்தாசனம் - Forward Bend - 5 தடவை - 15 விநாடி முதல் 30 விநாடிவரை
2. சர்வாங்காசன் - Shoulder stan - 2 தடவை த நிமிஷம்
3. ஹாலாசனம் (Plough) - 4 தடவை - 15 விநாடிகள்
4. சலபாசனம் - 3 தடவை -5 விநாடிகள்

நாடி சுத்தி - காற்றை இயன்ற அளவு இரண்டு மூக்கு வழியாலும் உள்ளிழுத்து 30 விநாடிகள் நிறுத்தி வெளிவிடவும் இதனை பத்து தடவைகள் செய்யவும். ஒவ்வொரு தடவையும் 5 விநாடிகள் ஓய்வு எடுக்கவும்.



பச்சி மொத்தாசனம்

மேற்குறிப்பிட்ட பயிற்சிகளை செய்யும்போது உடலின் தன்மைக்கு ஏற்ப படிப்படியாக பயிற்சி செய்யவும். மேலே குறிப்பிட்ட ஆசன பயிற்சிகளை படங்களைப் பார்த்து செய்யலாம் அல்லது ஆசிரியர் மூலமாக பழகுவது நன்று. - *நன்றி யோகக்கலை*



சர்வாங்காசனம்


**Neelam SILK**

20ம் நூற்றாண்டின் இறுதி மலிவு விற்பனை

**நீலம் சில்க்**

2000ஆம் ஆண்டின் புதிய புடவைத் தெரிவுகளை நம்மவர்களுக்கு அறியத்தருகிறார்கள் **'நீலம் சில்க்'**

உயர்ரகப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்

- முகூர்த்தப்பட்டுப் புடவைகள்
- பாரம்பரிய பட்டுப் புடவைகள்
- Thread Work பட்டுப்புடவைகள்
- ரிசு சேலைகள்
- காஞ்சி 2000 ரிசு சேலைகள்
- Emboss Tissue சேலைகள்,
- Cut Work சேலைகள்
- அபூர்வா 2000 Cut Work சேலைகள்



புதிய வெளியீடுகள்

மைசூர் சில்க் சேலைகள், சோனா மீனா (Sona Meena) புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள்

**'நீலம் சில்க்'**


"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST (Indian Bazzar)

CALL: (416) 778- 7455 FAX: (416) 778-848




பூட்டு? சாவி?



**KEERTH LOGSMITH**

வீடு-வியாபாரம்-தொழிலகம்

வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா? மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது சகலவித திறப்பு சம்பந்தமான பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்



(416) 439-3709

Pager: 375-7330



**யோகாசன வகுப்பு**


யோகாசனப் பயிற்சிகள் மூலம் உங்கள் உடல் நலத்தைப் பேணுங்கள். யோகாசன வகுப்பு நடைபெறுகின்றது

இடம்: Woburn Collegiat e (Markham /Ellesmere)

நேரம்: 7:30 am - 8:30am தொடர்புகளிற்கு: - சத்தி: 291-5853

# முத்துக்குறள் மூன்று

ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி,
பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்



பொன்குடத்திற்கு பொட்டு வைத்தாற்போல் நமது தமிழிலே உள்ள சிறந்த நூல்களுக்கெல்லாம் தலையாய நூல திருக்குறள். திருவள்ளுவர் ஆழ்ந்த ஞானத்தின் உச்சியில நின்று விலைமதிக்க முடியாத அரிய உண்மைகளை நமக்கு மிகத தெளிவாக்கியவர். இதிலே முயற்சிபற்றிய கருத்துக்களை பின்வரும் குறளிலே இவ்வாறு எடுத்துக் கூறியுள்ளார்.

"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்."

முயற்சி இல்லாமல் எதுவும் இல்லை. முயற்சிதான் சிறப்பான செயல்பாடுகளுக்குக் காரணமாக அமையும். தெய்வங்கள் தங்கள் ஆற்றலை மனிதஜாதிக்கு எடுத்துக்காட்ட மானிட வடிவூத்தில் தான் வந்தார்கள் என்பதை மறந்து விடக்கூடாது. சிவபெருமானின் 64 திருவிளையாடல்களும் மற்றும் கிருஷ்ணபரமாத்மாவின் 10 அவதாரங்களும் மனித வடிவில் தான் நிகழ்ந்தன. மற்றும் மனித உலகியல் வாழ்வோடு பின்னிப் பிணைந்து இரண்டறக் கலந்து தான் நடைபெற்றன என்பதை மறந்து விடக்கூடாது. ஜேசுநாதரும் மனிதவடிவில் வந்துதான் மக்களுக்கு அருள்பாலித்தார். தெய்வசக்தியென்பது மனித சக்தியின் பரந்த நிலை என்பதில் சந்தேகமில்லை. இது மனிதமுயற்சிகளின் வாயிலாகவே மக்களை சென்றடைகிறது. இது தூண்டாமணி விளக்குப்போல் செயல்படுகிறது.

அறிவியலின் கண்டுபிடிப்புகள் அனைத்தும் இறைவன் படைத்த இயற்கையின் ஆற்றலை கண்டுபிடித்து வெளிப்படுத்தியவையே ஆகும். மனிதன் இயற்கையை வெற்றி கொண்டான் என்பது பொய். அதை உணர்ந்தான் என்பது தான் மெய். விஞ்ஞானக் கருவிகள் பலரால் உருவாக்கப்பட்டது என்பது பலரின் மயக்கம். இயற்கையின் போக்குகளை தனக்கு சாதகமாக மாற்றிக்கொள்ள மனிதன் கண்டுபிடித்த உபாயங்களே விஞ்ஞானமாயிற்று. இயற்கையை எதிர்த்து மனிதன் பறக்கவில்லை. இயற்கையின் ஆற்றலைக் கண்டுபிடித்து அதை தனக்கு சாதக-மாக்கியும் பார்க்கிறான். அந்த முயற்சியில் பழுது ஏற்படும் போது விமானம் கீழே விழுந்து நொருங்குகிறது. அப்போது புவியீர்ப்பு சக்தி என்ற இயற்கை தான் செயல்படுகிறது. வானொலி, தொலைக்காட்சி போன்ற விஞ்ஞான சாதனங்கள மனிதன் படைப்புகள் அல்ல, இயற்கையில் பரவிக்கிடக்கும் மின்காந்த சக்தியை மனிதன் பயன்படுத்திக்கொள்ள செய்த முயற்சியின் மாபெரும் வெற்றியே. தெய்வ சக்தி எங்கும் வியாபித்து இருக்கிறது. மனிதமுயற்சி அதனைத் தேடி தனதுடையதாக்கிக் கொள்கிறது. இத்தனைக்கு மேலாக நீதியைக் கடைப்பிடிக்க எல்லும் கடமைப்பட்டவனாக இருக்கிறான். அதன் காப்பாளர்கள் நடுநிலையாக இருத்தல் அவசியம். இதை அவர்கள் தங்கள் கொள்கையாக இலட்சியமாக கொள்ளவேண்டும். அறம் எல்லோருக்கும் பொதுவானது என்பதை உணர்ந்து அறவழி நடக்க வேண்டும். நடுநிலை தவறினால் நன்மை அடையலாம் என்று எண்ணுவது தவறு. அப்படி நடந்து அதனால் வரும் செல்வத்தை உடனே விட்டொழிக்க வேண்டும். அக்கிரமம் ஆட்சி செய்து அநீதி வெற்றி பெற்றிருந்தால் நடுநிலமை அழிந்து விட்டது என்பது தான் பொருளாகும். இதனையே திருவள்ளுவர்

"நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே யொழிய விடல் "

நடுவு நிலை தவறுவதால் ஏற்படக்கூடிய பயன் நன்மையையே தரக் கூடியதாக இருந்தாலும், அந்தப் பயனைக் கைவிட்டு நடுவுநிலையைத்தான் கடைப்பிடிக்க வேண்டும். ஆள் அணிகளும் பணவசதிகளும் செல்வாக்கும் நிறைய இருக்கும் போது செய்த குற்றங்களை எளிதில் மறைத்து விடலாம். ஆனால் அவர்கள இறந்து போனபின் அவர்களைப் பற்றிப் பேசப்படுபவை நிச்சயமாக புகழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதை உணரவேண்டும். வசதியாக இருக்கும் போது செய்யப்பட்ட குற்றங்கள் அவருக்கு பயந்து மறைத்து வைக்கப்பட்டிருந்தாலும் அவருடைய இறப்புக்குப் பின்னர் நிச்சயம் வெளிப்பட்டே தீரும். ஒருவனுடைய வாழ்வுக்குப் பின்னர் எஞ்சி நிற்பது தான் அவனுடைய எச்சம் என்கிறார் வள்ளுவர். அவன் நிறைவுடையவனா, குறைவுடையவான என்பதை எச்சம காட்டிநிற்கும் என்கிறார் வள்ளுவர். வாழ்வில் நன்மை செய்தவர்கள் போற்றப் படுவார்கள். தீமை செய்தவர்கள் நிச்சயம் தூற்றப்படுவார்கள்.

"தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

ஒருவர் நேர்மையானவரா அல்லது நெறி தவறி, நீதி தவறி நடந்தவரா என்பது அவருக்குப் பன் எஞ்சி நிற்கப் போகும் புகழ்ச் சொல்லைக் கொண்டோ அல்லது பழிச் சொல்லைக் கொண்டோதான் நிர்ணயிக்கப்படும். உலகில் பிறந்தோர் அனைவரும் இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவித்தே தீரவேண்டும். ஒரு விசயத்தை இப்படி செய்திருந்தால் வெற்றி கண்டிருக்கலாமே இப்படி செய்யாமல இருந்தால் தோல்வியில் இருந்து தப்பியிருக்கலாம் என்பது மடமை. இன்பமும், துன்பமும், தீமையும், நன்மையும் மாறி மாறி வருவது இயற்கையின் நியதியும், வாழ்க்கை முறையும், தெய்வ சங்கற்பமும் ஆகும். எனவே வருவது வந்தே தீரும் என்ற எண்ணத்துடன் நடுநிலமையில் இருந்தும் வழுவாமல் வாழ வேண்டும். மேலும் நீதிக்குப் புறம்பான தீயஎண்ணங்களை நினைக்காமல் விட்டு விடவேண்டும்.

"கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி."

ஒருவர்க்கு வாழ்வும், தாழ்வும் உலக இயற்கை; அந்த இரு நிலமையிலும் நடுவுநிலையாயக இருந்து உறுதி காட்டுவதே பெரியோர்க்கு அழகாகும். நடுநிலமையில் இருந்து தவறி தீமை செய்ய எண்ணுவானானால் அன்றே எனக்கு தீமை வரப்போகிறது நான் கெட்டு நொந்து அழியப் போகிறேன் என்று முடிவு கட்டி விடவேண்டும். 'கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே' என்ற பழமொழியும் இதைக் குறிப்பிட்டு வந்ததேயாகும். (தொடரும்)




## கிராமத்து விருந்து

RESTAURANT, CATERING, TAKE OUT L.L.B.O.

603 Kennedy Road,
Scarborough, Ont.

☎: (416) 266-4240

4வது ஆண்டில் எமது உணவகம்

| | | |
|---|---|---|
| மரக்கறி | சாப்பாடு ---------------- | $2.99 |
| மீன் | சாப்பாடு ---------------- | $4.99 |
| கோழி | சாப்பாடு ---------------- | $3.99 |
| Ontario Crab | பிரஸ் நண்டு ------------ | $4.99 |
| யாழ் தோசை 4 | ------------------- | $1.99 |
| கொத்து ரொட்டி, ஆடு, மாடு, கோழி-- | | $3.99 |
| மசாலாதோசை | " " "---- | $2.99 |
| சிங்கப்பூர் நூடில்ஸ் - சிக்கன் ---------- | | $3.99 |
| 2 மட்டன் ரோல்ஸ் ---------------------- | | $1.00 |
| 3 வடை ------------------- | | $1.00 |



## நான் ஒரு வழக்கறிஞர் இல்லை


குடிவரவுச் சட்டம்
Immigration Law

குற்றவியல் சட்டம்
Criminal Law

குற்றவியல் தண்டனை
பெறுவதனால்....



உங்கள் வதிவிட உரிமை
- Permanent Resident
குடியுரிமை
- Citizenship
குடும்ப ஒன்றிணைவு
- Family Sponsorship
பாதிக்கப்படலாம்.



வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?

அடுத்து
செய்யவேண்டியது என்ன?



முதலில்
வைத்தியசாலைக்கு
செல்லுங்கள்...

பின் இவரை அழையுங்கள்...

எஸ்.கே. தீசன்
(416) 631-6322


## விளம்பர விநாடி வினா

இந்தப் போட்டி நிகழ்ச்சி பிரதி வாரந்தோறும் ஞாயிற்றுகிழமை மாலை 7:30 மணியளவி 24 மணிநேர தமிழ் வானொலியில் கேட்கலாம்

இப்போட்டியின் நோக்கம் - "தமிழ் மக்களின் அறிவையும், ஆற்றலையும் வளர்ப்பதே இந்நிகழ்ச்சியின் நோக்கமாகும்"

பெயர் - விளம்பர விநாடி வினா!
நிகழ்ச்சி - ½ மணி நேரம்
பரிசு - $25 பெறுமதியான பத்திரம் (Voucher)

குறிப்பிட்ட வியாபார ஸ்தாபனத்தில் பாவிக்க முடியும்

நிபந்தனைகள் -

1. 10 கேள்விகள் கேட்கப்படும். 7 இற்கு மேற்பட்ட வினாக்களிற்கு விடை தரவேண்டும்
2. 5 வினாடிகள் வழங்கப்படும் நிகழ்ச்சி நடத்துபவரின் முடிவே இறுதியானது.
3. குறிப்பிட்ட நிகழ்ச்சியில் ஒருவரிற்கு மேற்பட்டவர் 7 அல்லது 7 இற்கு மேற்பட்ட வினாக்களிற்கு சரியாக விடை கூறினால், அவரே வெற்றி பெற்றவராக கொள்ளப்படும். மேலும் இரண்டிற்கு மேற்பட்டவர்கள் ஒரே எண்ணிக்கையான சரியான பதில்கள் கூறினால், நிகழ்ச்சி நடத்துனர் குலுக்கல் மூலம் ஒரு அதிஸ்டசாலியை தெரிவு செய்வார்.

குறிப்பு

1. வினாக்களின் விடைகள் ஏற்கனவே விளம்பரம் பத்திரிகையில் வந்திருக்கும்.
2. வினாவிற்குரிய விடை ஒன்றிற்கு மேற் பட்டதாக இருப்பினும் விளம்பரம் பத்திரிகையில் வந்தவிடையே சரியெனக் கொள்ளப்படும்.
3. இப்போட்டி நிகழ்ச்சி விளம்பரம் பத்திரிகையின் ஆதரவில் நடைபெறுகின்றது.

பரிசு வழங்கும் நிறுவனம்

இந் நிகழ்ச்சிகளில் வெற்றி பெறுபவர்களிற்கு சபோனா ஸ்தாபனத்தில் பாவிக்க கூடிய பத்திரங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு பத்திரமும் $25 பெறுமதியானவை.

## விளையாட்டுத் தகவல்கள் - (42)

எஸ். கணேஷ்.

### ரொறன்ரோவில் ஏழாவது வருடமாக வெற்றி நடைபோடும் தமிழர் உதைபந்தாட்ட சங்கம் - (C.T.S.A.)



இன்று பலவகைப்பட்ட விளையாட்டுத் துறைகளில் எமது தமிழ் வீரர்கள் கனடாவில் தமது புகழையும், எமது சமூகத்தின் புகழையும் எடுத்தியம்பி வருகின்றனர். குறிப்பாக உதைப்பந்தாட்டத்தில் எமது வீரர்கள் கடந்த பல வருடங்களாக பல சாதனைகளை நிகழ்த்தி வருகின்றனர். எமது தமிழர் சமூகத்தில் உதைபந்தாட்டம் ஒரு புகழ் பெற்ற விளையாட்டாகும். குறிப்பாக ரொறன்டோவில் தமிழ் இளைஞர்கள் பெருமளவில் பங்கு பெறும் ஒரு விளையாட்டுத்துறை உதைப்பந்தாட்டம் ஆகும்.

நடந்து முடிந்த கோடை காலத்தில்(Summer) கனேடியத் தமிழர் உதைபந்தாட்டச் சங்கத்தின்(C.T.S.A.) நெறிப்படுத்தலில் ஒவ்வொரு கிழமையும் உதைப்பந்தாட்டப் போட்டிகள் மிகவும் விமர்சையாக நடந்து முடிந்தன. ரொறன்டோவில் பல வயதினராலும் எமது தமிழர்கள் இலவசமாகக் கண்டு களிக்க நல்லதொரு பொழுது போக்கு உதைப்பந்தாட்டம் என்றால் மிகையாகாது. கடந்த மூன்று வருடங்களாக மீண்டும் குறிப்பாக எவ்வித சச்சரவுகளும் இன்றித் திறமையாக உதைப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதற்குப் பிரதான காரணம் கனேடியத் தமிழர் உதைப்பந்தாட்டச் சங்கத்தின்(C.T.S.A.) நிர்வாகிகளேயாகும். கடந்த வருடங்களாகத் தங்கள் சொந்த நேரத்தை எமது இளைஞர்களுக்காகச் செலவழித்து சிறந்த நெறிப்படுத்தலில் சுற்றுப்போட்டிகளை நடாத்தி முடித்ததில் சங்க நிர்வாகிகள் மிகவும் பாராட்டுக்குரியவர்கள் கடந்த மூன்று வருடங்களாக C.T.S.A. அமைப்பின் தலைவராக யாழ். சென். அந்தனிஸ் கழகத்தில் புகழ் பரப்பிய உதைப்பந்தாட்ட வீரர் திரு. சில்வெஸ்டர் இம்மானுவல் அவர்களும், உபதலைவராக யாழ். சென். மேரிஸ் கழகத்தின் உதைப்பந்தாட்ட வீரரான திரு. ஆசீர்வாதம் அந்தோனிப்பிள்ளை அவர்களும், செயலாளராக வல்வை புளூஸ் உதைப்பந்தாட்ட வீரரான திரு. கணேஷ் அமிர்தேஸ்வரராஜா அவர்களும், பொருளாளராக கொக்குவில் இந்துவின் விளையாட்டு வீரரான திரு. ரஞ்சன் பொன்னுத்துரை அவர்களும் சிறப்பாகக் கடமையாற்றினர். இவற்றிற்கெல்லாம் சிகரம் வைக்குமாற் போல் கனேடியத் தமிழர் உதைப்பந்தாட்டச் சங்கமும், எமது நாட்டில் அல்லலுறும் தமிழ் மக்களுக்காக இவ்வருடம் $1050.00 கனேடிய டொலர்களைத் தலைவர் திரு. சில்வெஸ்டர் அவர்கள் தமிழர் புனர்வாழ்வு சங்கத்திடம் கையளித்தார். விளையாட்டுத்துறையில் மட்டுமல்லாது, பொதுச்சேவையிலும் எமது நாட்டு மக்களின் கஷ்டங்களிலும் C.T.S.A. பங்கு கொள்வது மிகவும் பாராட்டத்தக்கது. இது மற்றைய விளையாட்டுத் துறை சங்கங்களுக்கும் ஒரு முன்மாதிரியாகும்.

இன்று இங்கு ரொறன்டோவில் பல சங்கங்கள் வெவ்வேறு துறையில் இருந்தாலும், எமது இளம் தமிழ் இளைஞர்களை அதிகளவில் ஒன்று சேர்ப்பது தமிழர் உதைப்பந்தாட்டச் சங்கமேயாகும். இது ஒரு மிகவும் முக்கியமான வரலாற்றுக் கடமையென்று கருத வேண்டும் எமது சமூகம். ஏனெனில், ரொரன்டோவில் எமது சமூகத்தில் முக்கிய மூலக்கருக்கள் இளைஞர்களேயாகும்.

இவர்களை நன்னெறிப்படுதத்துவது விளையாட்டுத் துறைகள் மூலமே என்பது கண்கூடு. ஒரு Sportsmen தன்னுடைய விளையாட்டு அனுபவத்தின் மூலம் தனக்கென்று ஒரு ஒழுக்கத்தை வளர்த்துக் கொள்கிறான். இவ்வகையான ஒழுக்கத்தை வளர்த்துக் கொள்வதன் மூலம் தனது கல்வி அறிவையும், தேக ஆரோக்கியத்தையும் மிகவும் சுலபமாக மற்றவர்களிலும் பார்க்க வளர்த்துக் கொள்கின்றான். ஆகவே சமூகத்தில் ஒரு விளையாட்டு வீரன் தன்னை வளர்த்துக் கொள்வதன் மூலம், எமது சமூகத்திற்கும் பெருமை தேடித் தருகின்றான். இதற்கு உதாரணமாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகின்றேன். 1992ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் உதைப்பந்தாட்டச் சங்கம் சில பிரச்சினைகள் காரணமாக, 1995ம் ஆண்டு உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளை நடாத்துவதில் தடைகளேற்பட்டது. இந்த 1995ம் ஆண்டு ரொறன்டோவில் எமது தமிழ் இளைஞர் சமூகத்திலே பல குற்றவியல் சம்பவங்கள் பெருமளவில் அதிகரித்துக் காணப்பட்டன. உதைப்பந்தாட்டப் போட்டிகள் ஒரு சீராக நடைபெறும் போது, இக்குற்றவியல் சம்பவங்கள் பெருமளவில் குறைந்து காணப்படுகின்றன. காரணம் யாதெனில், கிழமை நாட்களில் பாடசலை அல்லது வேலைத்தலத்திலிருந்து வந்தவுடன் இளைஞர்கள் தத்தமது கழகங்களில் உதைப்பந்தாட்டப் பயிற்சிகளில்(Practice) கலந்து கொள்கிறார்கள். வார இறுதி நாட்களில் சுற்றுப்போட்டிகளில் கலந்து கொள்கிறார்கள். ஆதலால், இவர்களின் பொழுதுபோக்கு நேரங்கள் விளையாட்டுக்காகச் செலவிடப்படுகின்றன. இதனால், இவர்கள் பல விதமான பிரச்சினைகளிலோ அல்லது குற்றவியல் சம்பந்தமான விடயங்களிலோ அக்கறை காட்டுவதற்கு இவர்களுக்கு நேரமில்லை. அது மட்டுமல்லாமல் இவ்வகையான பிரச்சினைகளிலிருந்து சுலபமாக தம்மை விடுவித்துக் கொள்வதற்கு இவர்களுக்குத் தேவையான பக்குவம் விளையாட்டு மூலம் கிடைக்கின்றது. ஆகவே, எமது சமூகத்தின் கண்மணிகள் இவ்விளைஞர்களே, கனேடிய தமிழர் உதைப்பந்தாட்டச் சங்கத்தில் மொத்தமாக 18 விளையாட்டுக் கழகங்கள் அங்கம் வகிக்கின்றன. ஒவ்வொரு விளையாட்டுக் கழகமும் நூற்றுக்கும் அதிகமான அங்கத்தவர்களைக் கொண்டுள்ளன. ஆகவே, சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் இவ்வுதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் கலந்து கொள்கிறார்கள். இவர்களைத் திறமையாக நடைமுறைப்படுத்தும் C.T.S.A. சங்க நிர்வாகிகள் எமது சமூகத்திற்கு பெரும் தொண்டாற்றுகிறார்கள்.

1992ம் ஆண்டு இலங்கை உதைப்பந்தாட்டச் சங்கமெனப் பெயரிடப்பட்டு, திரு. தவலிங்கம் யோகராஜா, திரு. அலெக்ஸ் மகேந்திரன் ஆகியோரின் பெரும் முயற்சியால் இச்சங்கம் உருவாக்கப்பட்டது. 1997ம் ஆண்டு கனேடிய உதைப்பந்தாட்டச் சங்கம்(C,T.S.A.) எனப் பெயர் மாற்றப்பட்டுப் புதிய நிர்வாகக் குழுத் தலைவர் திரு. சில்வெஸ்டர், செயலாளர் திரு. கணேஷ் அமிர்தேஸ்வரராஜா இவர்களின் பெரு முயற்சியின் மூலமும் கடந்த வருடங்களாக திறமையாக நடைபெற்று வருகின்றது. ரொறன்டோவில் உதைப்பந்தாட்டம் என்றால் "சண்டை சச்சரவு" என்ற நிலை மாறி. மிகவும் அமைதியாகவும், ஒழுக்கமாகவும் தற்போது போட்டிகள் நடைபெற்று வருவது, இச்சங்கத்தின் முயற்சிகளுக்குக் கிடைத்த பெருவெற்றி என்றே கருத வேண்டும்.


Dr.செல்லையா செல்வநாயகராசா (செல்வா)

(MBBS., LMCC., CCFP)

குடும்ப வைத்தியர்

Family Physician


November 15, 1999 முதல்

Mississauga, Brampton

ஆகிய இடங்களில் ஆரம்பம்

உங்கள் தேவைகளுக்கு பின்வரும்

இடங்களில் தொடர்புகொள்ளவும்



**Mississauga**
Airport Medical Centre
7460 Airport Road
Mississauga, Ont.
L4T 2H5
☎: (905) 678-6365

**Brampton**
Professor' Lake Medical Clinic
2 Philosophers Trail
Unit 1 A
Brampton, Ont., L6S 4C9
☎: (905) 799-0000

Compu Service
COMPUTERS & NETWORK
(416) 399-3235 - (905) 432-2422


COMPUSERVICE International

CONTACT - ALAN SIVA
@ (416) 431-3753
(416) 431-4357
(416) 399-3235

COMPUTER SALES
NEW & USED
NETWORK DESIGN
& INSTALLATION

REPAIRS
UPGRADES
CD BACKUPS
SOFTWARES

(905) 432-2422
*FAX: (416) 431-5828
Email: compuservice@pathcom.com



ELECTRICAL REPAIRS

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள்

றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த

செலவிலும்,சிறந்த முறையிலும்

குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்

முருகதாஸ் - ☎ 261-6883


இவ்வருடம் அரியாலை விளையாட்டுக் கழகம் தாம் நடாத்திய சுற்றுப்போட்டியில் முதன்முதலில், இச்சங்கத்தைத் தொடக்கி வைத்த நிர்வாகிகளைக் கௌரவித்தமை பாராட்டுக்குரியதாகும். இவ்வருடம் மிக முக்கியமாக ரொறன்டோ புளூஸ் நடாத்திய சுற்றுப்போட்டியில் என்றுமே இல்லாதவாறு 32 கழகங்கள் பங்குபற்றின. இதில், மொன்றியலில் இருந்து 5 கழகங்கள் வந்து கலந்து

கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். கடந்த சில வருடங்களாக Montreal Staff விளையாட்டுக் கழகம் பல சுற்றுப் போட்டிகளில் மொன்றியலில் இருந்து இங்கு வந்து கலந்து கொள்வதும், மே மாதம் Victoria விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட சுற்றுப்போட்டிகளில் ரொறன்டோவிலிருந்து ஏறக்குறைய 10 கழகங்களுக்கு மேல் மொன்றியலுக்குப் போய் ஒவ்வொரு வருடமும் விளையாடி வருவதும் Toronto - Montreal தமிழ்ச் சமூகங்களை இணைக்கும் ஒரு நல்ல பாலமாகக் கருதலாம்.

இவ்வருடம் கலந்து கொண்ட விளையாட்டுக் கழகங்களின் விபரங்கள் பின்வருமாறு:

யாவேஸ் வி. கழகம், ரொறன்டோ புளூஸ் வி. கழகம், ஜலாண்டர்ஸ் வி.கழகம், யுனைட்டட் வி. கழகம், கொழும்பு வி.கழகம், ஸ்காபுரோ றேஞ்சர்ஸ் வி.கழகம், மிஸ்சிசாகா பந்தர்ஸ் வி. கழகம், மொன்றியல் ஸ்ராவ் வி. கழகம், அரியாலை வி. கழகம், குமரன் வி. கழகம், கொக்குவில் வி. கழகம், யங்கென்றிஸ் வி. கழகம், இ. என். ஏ. வி. கழகம், சண்றைஸ் வி. கழகம், ஐலான்டஸ் பிரேக்கஸ் வி. கழகம், மார்க்சூன் வி. கழகம், விலேச்போய்ஸ் வி. கழகம், வலிபோய்ஸ் வி. கழகம், அப்பிள்வுட் வி. கழகம்,

2000ம் ஆண்டுக்காகத் தெரிவு செய்யப்பட்ட (C.T.S.A.) பொதுக் குழுவினர் விபரம் வருமாறு:

தலைவர்:- திரு. சில்வெஸ்டர் இமானுவேல்
உப-தலைவர்:- திரு. ஆசீர்வாதம் அந்தோனிப்பிள்ளை
செயலாளர்:- திரு. கணேஷ் அமிர்தேஸ்வரராஜா (ரொறன்டோ புளூஸ்)
பொருலாளர்:- திரு. நந்தபாலன் (சண்றைஸ் வி. கழகம்)
நிர்வாகக் குழு உறுப்பினர்கள்:- திரு. ரவி (சண்றைஸ் வி. கழகம்)
திரு. ஜெனா (மிசிசாகா பந்தர்ஸ் வி. கழகம்)
திரு. சிவராஜா (யாவேஸ் வி. கழகம்) இப் புதிய

செயற்குழு 2000ம் ஆண்டுக்கான போட்டிகளைத் திறம்படச் செயற்படுத்தும் என்று விளம்பரம் பத்திரிகை சார்பாக வாழ்த்துகின்றது.

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

-தொகுப்பு - பரம் & சண்

### 1968

| | |
|---|---|
| 1. அன்புவழி | 2. அன்று கண்ட முகம் |
| 3. உயர்ந்த மனிதன் | 4. உயிரா மானமா |
| 5. எங்க ஊர் ராஜா | 6. என் தம்பி |
| 7. எதிர் நீச்சல் | 8. ஒளி விளக்கு * |
| 9. கலாட்டா கல்யாணம் | 10. கல்லும் கனியாகும் |
| 11. கணவன் | 12.கண்ணன் என் காதலன் |
| 13. காதல் வாகனம் | 14. குழந்தைக்காக |
| 15. குடியிருந்த கோயில் * | 16. சக்கரம் |
| 17. சத்தியம் தவறாதே | 18. சிரித்த முகம் |
| 19. செல்வியின் செல்வன் | 20. சோப்பு சீப்பு கண்ணாடி |
| 21. டில்லி மாப்பிள்ளை | 22. டீச்சரம்மா |
| 23. தாமரை நெஞ்சம் | |
| 24. தில்லானா மோகனாம்பாள்* | |
| 25. திருமால் பெருமை* | 26. தேவி |
| 27. தெய்வீக உறவு | 28. தேர் திருவிழா |
| 29. நாலும் தெரிந்தவன் | 30. நிமிர்ந்து நில் |
| 31. நீயும் நானும் | 32. நீலகிரி எக்ஸ்பிரஸ் |
| 33. நேர்வழி | 34. பணக்காரப் பிள்ளை |
| 35. பணமா பாசமா | 36. பால் மனம் |
| 37. புதிய பூமி | 38. புத்திசாலிகள் |
| 39. பூவும் பொட்டும் | 40. பொம்மலாட்டம் |
| 41. முத்துச் சிப்பி | 42. மூன்றெழுத்து * |
| 43. ரகசிய போலீஸ் 115* | 44. லஷ்மி கல்யாணம் |
| 45. ஜீவனாம்சம் | 46. ஹரிச்சந்திரா |

எம். ஜி. ஆர்., சிவாஜி, எஸ், எஸ், ஆர், ஜெமினி, சிவகுமார், முத்துராமன், ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், அசோகன், ஏ.வி.எம். ராஜன் என்று பழைய, புதிய தலைமுறை நட்சத்திரங்களின் திறமைமிக்க கலை உணர்வினாலும், ஆரோக்கியமான வர்த்தகப் போட்டிகளினாலும் தமிழ் சினிமா உலகம் சிம்மாசனம் போட்டு உட்கார்ந்திருந்த காலங்கள் இவை என்று அறுபதுகளைக் குறிப்பிடலாம். அந்த வகையில் 1968ஆம் ஆண்டும் சிறப்பு மிகுந்த கலை ஆண்டாகவே மிளிர்ந்தது. நடிகர் திலகத்தின் 125வது வெற்றிப்படமான ஏவி.எம். தயாரிப்பான **'உயர்ந்த மனிதன்'**, மக்கள் திலகத்தின் 100வது வெற்றிப்படமான ஜெமினி தயாரிப்பான **'ஒளி விளக்கு'**. ஆகிய இரு படங்களும் வெளியான சிறப்பு ஆண்டு இது.

சென்ற ஆண்டைப் போலவே இவ்வாண்டும் சிவாஜி அவர்கள் எட்டுப் படங்களில் நடித்திருந்தார்.

'உயர்ந்த மனிதன்'. 'எங்க ஊர் ராஜா'. 'என் தம்பி'. 'திருமால் பெருமை'. 'லஷ்மி கல்யாணம்'. 'அரிச்சந்திரா' என வித்தியாசமான பாத்திரங்களில் சிவாஜி நடித்துப் புகழ் பெற்றார். குறிப்பாக 'உயர்ந்த மனிதனில்' சிவாஜியும் சிவகுமாரும் முதன் முதலாக இணைந்து நடித்த படம் எல்லாமே வெற்றிப் படங்கள்.

'தம்பியின் (சிவாஜியின்) படங்களில் நான் அடிக்கடி விரும்பிப் பார்த்தது 'தில்லானா மோகனாம்பாள்' என்று எம்.ஜி.ஆர். மகிழ்ச்சியாக இருக்கும் போது கூறுவார். அப்படி எல்லோராலும் எந்தக் காலமும் பார்த்து மகிழக்கூடியபடம் ஏ.பி.என். தயாரித்த 'தில்லானா மோகனாம்பாள்'.

அதேபோன்று முதன் முதல் ஜெமினி ஸ்ருடியோ தயாரிப்பில் வெளிவந்த ஒரே படமாகவும் எம்.ஜி.ஆரின் 100வது படமாகவும் 'ஒளி விளக்கு' அமைந்தது மட்டுமல்ல எம்.ஜி.ஆர் தனது நடிப்பில் புதிய பரிமாணத்தையும் கொண்டு வந்தார். வெற்றிப்படமென்று சொல்லியாகவேண்டும். அத்துடன் 'கணவன்', 'கண்ணன் என் காதலன்', 'காதல் வாகனம்', 'குடியிருந்த கோயில்', 'தேர் திருவிழா', 'புதிய பூமி', 'ரகசியப் போலீஸ்-115' என மக்கள் திலகமும் எட்டுப் படங்களின் நடித்திருந்தார். அனைத்துமே வெள்ளிப் பணத்தை அள்ளிக் குவித்தது.

பிரபல பின்னணிப் பாடகர் டி. எம். எஸ். நடித்து வெளிவந்த 'கல்லும் கனியாகும்' பாடல்களாலும், டி.எம்.எஸ் சும் நடிப்பில் மன்னர் என்பதையும் வெளிக் காட்டிய படமாகும்.

இயக்குநர் கே. பாலசந்தரின் 'எதிர்நீச்சல்', 'தாமரை நெஞ்சம்'. கே. எஸ். ஜியின் 'பணமா பாசமா' (ஜெமினி, சரோஜா தேவி) ஏ.வி.எம். ராஜன் நடித்த 'சக்கரம்' 'பூவும் பொட்டும்' ஆகியவற்றுடன் ரவிச்சந்திரன், ஜெய்சங்கர் ஆகியோரின் பல படங்கள் வெளிவந்து வெற்றிபெற்றன. அதிகமாக எல்லாப் படங்களிலும் நகைச்சுவை நடிகர் நாகேஷ் பங்கேற்றிருந்தார். 'எதிர் நீச்சல்', 'தாமரை நெஞ்சம்', 'தில்லானாமோகனாம்பாள" ஆகிய படங்களில் திரு. நாகேஷ் ஏற்றிருந்த பாத்திரங்கள் என்றென்றும் நினைவில் நிற்கக் கூடியவையாகும். நகைச் சுவை பாத்திரமின்றிக் குணச்சித்திர நடிப்பிலும் இவர் எவருக்கும் சளைத்தவரல்ல என்று நிரூபித்த பல படங்களில் இவையும் சிலவாகும்.




'குடியிருந்த கோயில்' -பண்டரிபாயுடன்

### 1968ம் ஆண்டில் சென்னை சினிமா இரசிகர் சங்கத்தின் விருதுகள் விபரம்

| | |
|---|---|
| படம்: | தில்லானா மோகனாம்பாள் |
| நடிகர். | சிவாஜி கணேசன் (உயர்ந்த மனிதன்) |
| நடிகை: | சௌகார் ஜானகி (உயர்ந்த மனிதன்) |
| நகைச்சுவை நடிகர்: | நாகேஷ் (தாமரை நெஞ்சம்) |
| நகைச்சுவை நடிகை: | மனோரமா (தில்லானா மோகன்) |
| குழந்தை நட்சத்திரம்: | பேபி ராணி (குழந்தைக்காக) |
| பின்னணி: | TMS, P. சுசீலா |
| இசை: | M.S. விஸ்வநாதன் (உயர்ந்த மனிதன் |
| கதை-டைரக்ஷன்: | K. பாலசந்தர் (தாமரை நெஞ்சம்) |


**AIRPORT SERVICE & MOVING VAN**

ஏயர்போட்டிற்கு பிரயாணிகள் போய் வருவதற்கான சேவைகளும், மற்றும் பொருட்களை இடமாற்றம் செய்வதற்கான சேவைகளிற்கு



☎: (416) 759-0557


## நான் வாழப் போகிறேன்

-வீணை மைந்தன்



### சுவடு 41

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஜெயலலிதா, மிகுந்த திறமை சாலிகளுக்கும் சில சமயம் அவர்கள் மேற்கொண்டிருக்கும் தொழிலிலேயே சவாலாக சில விடயங்கள் முளைச்சிடும். அதுபோல சிறந்த நடிகரான உங்களுக்கே சவாலாக இருந்த வேஷம் எது? என்று கேட்டதற்கு சிவாஜி அவர்களின் பதில் இவ்வாறு கூறப்பட்டது. "நல்ல கேள்வி, கப்பலோட்டிய தமிழனாக நடிச்சேனே! அதுதான் உண்மையிலேயே எனக்குச் சவாலாக இருந்த வேஷம். ஏன்னா கப்பலோட்டிய அந்தப் பெருமகனாரைப் பார்த்த பலர் இன்னைக்கும் நம்மோடயே இருந்துகிட்டிருக்காங்க. கதைக்குள்ளே வரும் பாத்திரங்களை ஏற்று நடிப்பது சுலபமான காரியம். ஆனால் நமது வாழ்க்கையில் சந்தித்த அதுவும் சமீப காலம் வரைக்கும் இருந்த ஒரு பெரிய மனிதரைப் போல நடிக்கிறோம் என்று சொல்ற போது அந்த நடிப்பை எல்லோரும் ஏத்திக்கணும். அதிலே மாறுபாடு எழக்கூடாது. பெரியார் அவர்களைப் போல நடிக்கிறோம் என்றால் பார்க்கிறவங்க பெரியாரைப் பார்ப்பது போலவே இருந்ததுன்னு சொல்லணும். அப்போது தான் நடிப்பு பூரணப்படுத்தப்படும். அந்தமாதிரி ஒண்ணுதான் இந்தக் 'கப்பலோட்டிய தமிழன்' வேடம். இதில் நான் நடிச்சதைப் பார்த்திட்டு, அந்தப் பெரியவர் வ.உ.சி. யின் மகன், "என் அப்பாவையே நேரில் பார்த்தது போல் இருந்தது"ன்னு சொன்னார். எனது வாழ்வில் கிடைத்த மிகப்பெரிய வாழ்த்தாகவும் வெற்றியாகவும் இதைக் கருதுகிறேன்."

### சுவடு 42

நடிகர் திலகம் அவர்களுடைய திரைப்பட சகாப்தத்தில் பங்கு கொண்ட முன்னணிக் கதாநாயகிகள் வரிசையில் ஒரு சில படங்களுடன் தத்தமது பங்களிப்புத் தொடர முடியாத நிலையில் சில நட்சத்திரங்கள் வாழ்ந்துள்ளார்கள். ஒரு சில குறிப்பிட்ட நடிகைகளுக்குப் பல படங்களில் நடிக்கும் வாய்ப்பும் இன்னும் ஒரு சிலருக்கு ஓரிரு படங்களில் கதாநாயகி பாத்திரமும் தொடர்ந்து சில படங்களில் துணைப் பாத்திரங்களும் அமைவது தயாரிப்பாளரையும், இயக்குநரையும் சார்ந்த விடயமாகும்.

சில முன்னணிக் கதாநாயர்கள் தங்களது சிபார்சின் பேரில் கதாநாயகியையும் துணை நடிகைகளையும் நடிக்க வைப்பதுண்டு. இன்ன கதாபாத்திரத்திற்கு இவர்தான் பொருத்தமானவர் என்று இயக்குநர் முடிவு செய்வதும் கதைக்கு வலிமை சேர்ப்பதாகும். இயக்குநர் கே.எஸ். கோபாலகிருஷ்ணன் அவர்களது படங்களில் பாத்திரங்களுக்கேற்றாப்போல் நட்சத்திரங்களைத் தெரிவு செய்வதைக் குறிப்பாக அவதானிக்கலாம். நடிகர் திலகம் அவர்கள் ஒரு குறிப்பிட்ட நாயகியையே தன்னுடைய படங்களில் நடிக்க வைக்க வேண்டும் என்று தயாரிப்பாளரிடமோ இயக்குநரிடமோ வலியுறுத்துவதில்லை. சில சமயங்களில் இயக்குநர் பீம்சிங், ஸ்ரீதர் போன்ற நண்பர்கள் அபிப்பிராயம் கேட்டால் இன்ன பாத்திரத்தை இவர் செய்தால் பொருத்தமாக இருக்கும் என்று மட்டும் கருத்துக் கூறுவார். ஆனால் வலியுறுத்தமாட்டார். யார் கூட நடித்தாலும் அவர்களுடைய நடிப்பும் பரிமளிக்கவேண்டும் என்று மிகுந்த அக்கறை எடுத்து சமநிலைப்படுத்தி பாத்திரம் படைப்புகளுக்கு மெருகூட்டுவதில் சிரத்தையெடுப்பதைக் கூட நடிக்கும் நடிக நடிகைகள் கூறுவார்கள். ஒரு படத்தில் நடித்தாலும் புகழ் பெற்ற படங்களாக சில படங்கள் அமைந்து விடுவதுண்டு.

உதாரணமாக 'மனோகரா' வில் அவரது மனைவியாகப் பாண்டிய நாட்டு இளவரசி விஜயா எனும் பாத்திரத்தையேற்று இன்றுவரை பேசப்படுவர் திருமதி கிரிஸா அவர்கள். 'திரும்பிப்பார்" படத்திலும் கிரிஸா தோன்றுவார். சிவாஜியின் நாயகியாக அல்ல. 'திரும்பிப்பார்' படத்தில் கூட கிருஷ்ணகுமாரி என்ற நடிகையை காதலித்து மணம் செய்வதாக வாக்குறுதி அளிப்பார். ஏமாற்றி விடுவார். பாத்திரப் படைப்புகள் அப்படி. அதேபோல் 'இருவர் உள்ளம்" படத்தில் கதாநாயகி சரோஜா தேவியைத் தவிர்த்து ஆரம்பத்தில் பல பெண்களுடன் பழகியது போன்ற பிளே போய் பிரபல முன்னணி நட்சத்திரமான 'லட்சுமி''யுடன் ஓரிரு படங்களில் இணைந்தும் (சமீபத்தில் வெளியான படையப்பா உட்பட) துணைப்பாத்திரங்களில் (இராஜராஜ சோழனில் மகள்). அதே லட்சுமியின் தாயார் திருமதி. ருக்மணி அவர்களை நாயகியாகக் கொண்டு புகழ் பெற்ற 'கப்பலோட்டிய தமிழன்' படகிலும்....

பிரபல பாடகியும், நடிகையுமான எஸ். வரலட்சுமி அவர்களே வரலாறு படைத்த 'வீரபாண்டிய கட்டப்பொம்மன்' நாயகி தேவி ஜக்கம்மாவாகவும், 'இராஜராஜ சோழனில்' சகோதரியாகவும் தோன்றுவார். திருமதி. வைஜந்திமாலா அவர்களுடன் 'இரும்புத் திரை' (இப்படம் இரு நாயகிகளைக் கொண்டது. மற்றவர் திருமதி. சரோஜா தேவி முன்பு குறிப்பிட்டிருந்தேன்.) 'ராஜ பக்தி' 'சித்தூர் ராணி பத்மினி' 'பாவை விளக்கு' ஆகிய படங்களிலும்.

திருமதி. ஜமுனா அவர்களுடன் 'தங்கமலை ரகசியம்' ' மருத நாட்டு வீரன்', 'பொம்மைக் கல்யாணம்' 'நிச்சய தாம்பூலம்' ஆகிய மறக்க முடியாத படங்களிலும் ('தென்னாலிராமனிலும்' ஜமுனா துணைப் பாத்திரம் ஏற்கிறார்)



வீரபாண்டிய கட்டப் பொம்மன்

உஷா நந்தினி அவர்களுடன் 'கௌரவம்', 'பொன்னூஞ்சல்' ஆகிய படங்களிலும் திருமதி. வாணி ஸ்ரீ அவர்களுடன் புகழ்பெற்ற 'வசந்த மாளிகை', 'உயர்ந்த மனிதன்' (இரு நாயகிகள்), 'நிறை குடம்' ஆகிய படங்களிலும். பிரமிளாவுடன் துணையாக 'கவரிமானிலும்' திருமதி. சந்திரகாந்தா அவர்களுடன் 'பந்தபாசம்' (இரு நாயகிகள்) படத்திலும், வி நிர்மலாவுடன் 'ஞான ஒளி' யிலும் திருமதி. மனேரமா துணைவியாக 'ஞானப் பறவை' யிலும். திருமதி. பாரதியுடன் 'தங்கச் சுரங்கம்' படத்திலும் திருமதி. மாலினியுடன் 'சபாஷ் மீனா' விலும் மற்றும் ஸ்ரீப்பிரியா, ஸ்ரீதேவி ஆகியோருடன் சில குறிப்பிட்ட படங்களிலும் வடிவுக்கரசி அம்பிகா, ராதா, ஸ்ரீவித்யா, மஞ்சுளா ஆகியோருடனும் ஒரேயொரு சிங்களத் திரை நாயகியாக மாலினி பொன்சேகா (பைலட் பிரேம் நாத்தில்) வுடனும் ஜோடி சேர்ந்து நடித்த பெருமை திரையுலகில் சிவாஜி ஒருவருக்கே உரித்தாயிற்று.

*(சுவடுகள் தொடரும்)*

# அறிந்திருப்பது நல்லது

## உங்கள் Credit Rating உயர்த்துவதற்கான 10 வழிகள்.

### 1. Grow Roots

நிரந்தரமான தொழில் வருமானமும் நிரந்தரமான இருப்பிடமும் முதலில் இருத்தல் வேண்டும் . அதாவது நிரந்தரமான இருப்பிடமென்றால் குறைந்தளவு 1 வருடமாவது நீங்கள் ஒரு இடத்தில் வசித்திருக்க வேண்டும். கடன் தரும் நிறுவனங்கள், உங்களால் உங்கள் நாளாந்த செலவுகளை (Pay Your Bills) பராமரிக்க முடிகிறதா என்பதை பார்க்கிறார்கள்.

### 2. Pay Your Bills on Time

உங்கள் Credit Card, தொலைபேசி, Gas, Electricity ஆகிய எல்லா வகையான Bill களை அதன் குறித்த நேரகாலத்திற்குள் கட்டியிருக்க வேண்டும். Credit Card ற்கு குறைந்தது Billல் இருக்கும் குறைந்த கட்டணத்தை (Minimum Payment) யாவது கட்டியிருக்க வேண்டும். ஒரு தடவை அல்லது இருதடவை பிந்தியிருந்தால் பரவாயில்லை ஆனால் பலமுறை பிந்தியிருந்தால் விளக்கம் கொடுக்க வேண்டிய நிலை வரும்.

### 3. Run a Credit Check on yourself

உங்களுடைய Credit Rating நீங்களே அறியலாம். அதாவது Credit Bureau Equifax #1-800-465-7166 என்ற நம்பருக்கு அழைத்து உங்களுடைய இனாமான Credit Report ஐ பெற்று கொள்ளலாம். உண்மை என்னவெனில் 4 Report ல் 1 Report [One out of four] பிழையான தகவல்கள் இருக்கின்றன. அப்படி இருப்பின் நீங்கள் அந்த Credit Bureau ற்கோ அல்லது உங்கள் பிழையான தகவல் இருக்கும் நிறுவனத்திற்கோ தொலைபேசி மூலம் கதைத்து உங்கள் Report ஐ சரிப்படுத்தலாம்.

**உதாரணமாக** - உங்களிடம் Sears Card இல்லை. ஆனால் உங்கள் Reportல் நீங்கள் Sears Card ற்கு செலுத்திய பணம் நேரம் பிந்தியிருப்பதாக இருக்கிறது. நீங்கள் செய்ய வேண்டியது உடனடியாக Credit Bureau ற்கு தொலைபேசி மூலம் கதைத்து பிழையை நிவர்த்தி செய்தல் வேண்டும். அது தவறின் நீங்கள் Sears Co. ற்கும் தொலைபேசி மூலம் கதைத்து நிவர்த்தி செய்யலாம்.

### 4. Start Small

அதாவது உங்களுக்கு Credit History இல்லாவிடின் நீங்கள் $50,000. Line of Credit ஐ கேட்டு வங்கியை அணுகுவது சிறந்ததல்ல. அது உங்கட்கு கிடைக்கவும் மாட்டாது. செய்ய வேண்டியது என்னவெனில் ஒரு சிறிய R.R.S.P. Loan ஐ எடுத்து அந்த தவணைக்குள் நேரம் தவறாமல் கட்டி முடிக்கவும் அல்லது ஒரு Department Store Card ஐ Apply பண்ணி எடுத்து அதை நேரம் தவறாமல் கட்டி முடித்திருத்தல் வேண்டும். இது உங்கட்கு ஒரு நல்ல தொடக்கமாக இருக்கும்.

### 5. Secure yourself

அதாவது உங்களால் Credit Card எடுக்க முடியாவிடில் நீங்கள் கட்டு பணமாக சிறு தொகையை கட்டி Credit Card ஐ எடுக்கலாம். (Secured Credit Card) அதன் பின் நீங்கள் இந்த Card ஐ வைத்து உங்கள் Credit ஐ தொடரலாம்.

### 6. LOOK (RICH) BEFORE YOU LEAP

உங்கள் நிரந்தர வேலையை விலகி தனியாக வேலை செய்யும் (Self Employee) நோக்கம் இருப்பின், நீங்கள் ஒரு Line of Credit ஆரம்பித்து விட்டு விலகுவது சிறந்தது.

### 7. GET TO KNOW YOUR BANKER

உங்களுக்கு எப்படிப்பட்ட Credit History இருப்பினும், உங்களுடைய Banker உங்களை பற்றி நல்ல அபிப்பிராயம் இருப்பின் Credit எடுப்பது சிறிது இலகுவாக இருக்கும்.

### 8. KEEP AN EMERGENCY STASH

எப்போதும் சிறிதளவு பணத்தை சற்றே ஒதுக்கி உங்கள் அவசர காலத்திற்கு பாவிப்பதற்கு வைத்திருத்தல் மிகவும் நல்லது. அதாவது ஏதாவது சிறிய விபத்து நடந்தால் உங்களுடைய Bill களை 2 அல்லது 3 மாதங்களுக்கு கட்ட கூடியதாக இருத்தல் நல்லது. ஆகவே உங்களுடைய Credit History பாதிக்கபடாமல் இருக்கும்.

### 9. STICK TO TWO CREDIT CARDS

2 அல்லது 1 Credit Card வைத்திருப்பதால் அதனை உங்கள் தேவைகளுக்கு பாவிப்பதன் மூலம் நீங்கள் ஒரு நல்ல் History ஐ உருவாக்க முடிகிறது. அது மாத்திரமல்லாமல் அதிக Credit Card வைத்திருந்தால் அதிக கடனாளியாக இருக்க நேரிடுகிறது.

### 10. FACE THE MUSIC

அதாவது எவ்விதமான Credit பிரச்சினை இருப்பினும், நீங்கள் அதற்கேற்க விளக்கம் அளிக்க கூடியதாக இருத்தல் வேண்டும். உங்கள் விளக்கம் நியாயமாக இருந்தால், நீங்கள் சிறிதளவு மன்னிக்கப்படுவதற்கு இடமுண்டு. நீங்கள் நியாயமாகவும் உங்கள் நடத்தையும் செயல்களும் நியாயமாக இருந்தால் உங்களையும் மீறி வரும் பிரச்சனைகளுக்கு மன்னிப்பு கிடைக்க இடமுண்டு.

அடுத்த இதழில் உங்கள் Credit ஐ மோசமாக்குவதற்கான 5 வழிகளைப் பார்ப்போம். *-Jey Ahamparam (416) 498-4743*


BANANA LEAF
Take-out & Catering

Everyday Special
ஆடு, மாடு, புரியாணி — Free வட்டிலப்பம் — $5.50

தினமும் ஸ்பெஷல்

| | | |
|---|---|---|
| செவ்வாய், வெள்ளி | மரக்கறி சாப்பாடு 10 வகை கறியுடன் மத்தராஸ் தாளி (FREE POTATOES PORI) | $4.99 |
| புதன் | புட்டு, முட்டைப்பொரியல், இறால் குழம்பு சம்பல், பருப்பு | $3.99 |
| வியாழன் | 3ரொட்டி, சிக்கன் பாலுண்டி கட்டைச்சம்பல் | $3.99 |
| சனி, ஞாயிறு | மீன் சாப்பாடு, மரக்கறி வகைகளுடன் | $5.50 |
| ஞாயிறு | LampRice | $5.50 |
| திங்கள் | மூடப்பட்டிருக்கும். | |

431 Nugget Avenue, Unit 10, Scarborough, Ont. (Markham & Nugget)
Tel: (416) 609-9247 Pager (416) 600-1030, (416) 704-8208 (24hrs.)



NetTek Training & Solutions Inc.
(416) 431-4545
868 Markam Road, Suite # 104, Scarborough, Ontario, M1H 2Y2

MCSE & JOB TRAINING
MICROSOFT CERTIFIED SYSTEMS ENGINEER
Centre for COMPUTER STUDIES AND EMPLOYMENT

Windows NT 4.0 Workstation
Windows NT 4.0 Server
Enterprise Server 4.0
Networking Microsoft TCP/IP
Internet Information Server 4.0
Networking Essentials
$ 299.00

FREE COMPUTER FOR UNEMPLOYED STUDENTS & SOCIAL BENEFIT STUDENTS

PROGRAMMING
JAVA
C++ LANGUAGE
VISUAL BASIC

KIDS COMPUTER CLASSES!!
INTRODUCTION TO COMPUTERS FOR ADULTS

CNA
CERTIFIED NOVELL ADMINISTRATOR
Web Designing & HTML Classes (Level-1 & Level-11)

QUICK REVIEW in MCSE Courses $99.00 for each!!

E-Mail: nettek-training@home.com
www.nettek-training.com
Microsoft® Certified Professional Systems Engineer


We do Computer Training, Network Consulting & Computer




ஃ கிரகப் பொருத்தம் பார்த்தல்
ஃ சுபமுகூர்த்தம் கணித்தல்
ஃ சாதகக் குறிப்பு கணித்தல்
ஃ பலன் பாத்தல்
ஃ எண் சோதிடப்படி ஆலோசனை கூறுதல்
☎: 299-8361

## சூரியக்குடும்பம் 21 விண்வெளி தருபவர்- கனி

நமது பூமியின் அசைவு சூரியனைச் சுற்றி ஒரு நீள்வட்டப்பாதை என்பது யாவருக்கும் தெரிந்த ஒன்று. இதன்படி எமது மனதில் பூமியின் அசைவு பற்றி எழும் படம் எவ்விதம் அமையும்? சூரியனை நடுவில் கொண்ட ஒரு நீள்வட்டப் பாதையாகவே பூமியின் அசைவின் பாதை தெரியும்.(படத்தில் உள்ளது போல்)




இது சூரியனின் நிலை தொடர்பான பாதையாகும். உண்மையில் சூரியனில் நின்று ஒருவர் பூமியைப் பார்ப்பாரே ஆயின் பூமியின் அசைவு அப்படித்தான் தெரியும். பூமிக்கும் சூரியனுக்கும் வெளியே ஒரு இடத்தில் நின்று பார்க்கும் ஒருவருக்கு பூமியின் அசைவு எப்படித் தெரியும் என்று நினைக்கின்றீர்கள்? சூரியனும் வெளியில் எங்கேயோ நோக்கி அசைந்து கொண்டு போவதினால் பூமியின் பாதை ஒரு தளத்தில் நீள்வட்டப்பாதையில் இராது. சூரியனின் அசைவுக்கு ஏற்ப, பூமியின் நீள்வட்டப் பாதையும் இழுபட்டுப் போய் விடும். அருகில் உள்ள படத்தில் உள்ளது போல் பூமியினது பாதை ஒரு சுருள் வடிவில் காணப்படும். எனவே வெளியில் இருந்து பார்ப்பவருக்கு பூமி ஒரு சுருள் (Spring) வடிவில் அசைவது போன்றே தெரியும். இதுவே எமது பூமியின் உண்மையான இயக்க வடிவம் ஆகும்.



